**நவம்பர் - 22**

**"உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது."**

**- சங் 69.9.**

குளிராகவுள்ள ஜனங்களும், கணக்குப் பார்க்கிற (சுயநலமுள்ள) ஜனங்களும் மற்ற நல்ல குணங்களை உடையவர்களாக இருக்கலாம். ஆனால், கர்த்தர் தயை உள்ளவரென்பதை ஒருதரம் ருசி பார்த்தவர்கள் குளிராகவோ இருக்கவோ அல்லது வெதுவெதுப்பாக இருக்கவோ இடமே இல்லை. இப்படிப்பட்டவர்களிடத்தில் தூண்டப்பட்ட அன்பு பட்சிக்கிற பக்திவைராக்கியத்திற்கு அவர்களை நடத்த வேண்டும். நம்முடைய கர்த்தராகிய யேசுவினிடத்தில் அப்படியே இருந்தது. ஏன் அவர் பிதாவுக்கு பிரியமானவராயிருந்தார் என்பதுக்குரிய காரணங்களில் இது ஒன்று. கர்த்தரின் பார்வையில் பிரியமாயிருக்க விரும்புகிற எல்லோரும் நீதிக்காகவும், சத்தியத்திற்காகவுமுள்ள பக்திவைராக்கியத்தின் அதே ஆவி கர்த்தரின் பலிபீடத்தில் பலிகளாகத் தங்களைப் பட்சிக்கும் படிக்கு, அந்த ஆவியினாலே அவ்விதமாக நிரப்பப்பட்டிருப்பார்களாக. இவ்விதமாக, அவர்கள் நம்முடைய கர்த்தராகிய யேசுவின் மூலமாக அவருக்கு மிகவும் பிரியமானவர்களாகவும், ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். **- Z ’98, 112 (R 2288).**

பக்தி வைராக்கியமாவது ஒரு காரணத்திற்காகவுள்ள (காரியத்திற்காகவுள்ள) ஒரு சுறுசுறுப்பான பக்தியையும் உற்சாகமுள்ள செயலுமாகும். தேவனுடைய ஒரு பிள்ளையில் இது தகுந்தவிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டால், அநேக குணங்களின் சேர்க்கையாக மாறும். அவைகளில் முக்கியமானவை விசுவாசம், நம்பிக்கை, அன்பு செயல் புரிதல், உற்சாகம், கீழ்ப்படிதல் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் ஆர்வம் (பக்தி வைராக்கியம்) தேவனுடைய ஏற்பாட்டின் அபிவிருத்திக்காக வழிநடத்தப்படுகிறது. இது தத்துவங்களுக்கும், ஆட்களுக்கும் ஆட்களுக்கும் சார்பாக அனுகூலமாகவும், மற்ற தத்துவங்களுக்கும், ஆட்களுக்கும் சார்பாக தேவனுடைய ஏற்பாட்டுக்கு சார்பாக அவர்களுடைய மனபாங்கும் சம்பந்தமும் வேறுபடுகிற பிரகாரம் வேறுபட்டு வேலை செய்கிறது. அப்படியே சில தத்துவங்களும் சார்பாக பிரதிகூலமாகவும், வேலை செய்கிறது. தேவனுடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி (பக்தி வைராக்கியம்) அதாவது கர்த்தருடைய வீட்டிற்காகவுள்ளதும், கர்த்தருடைய வீட்டிற்கு அசாதரணமானதுமான பக்தி வைராக்கியம், தேவனுடைய வார்த்தைக்கு இணக்கமான சபைக்கு சுறுசுறுப்பான பக்தியும் சபைக்காக செயல்புரிதலையும் குறிக்கிறது. யேசுக்கு எப்படியோ, அப்படியே நமக்கும் இருக்கிறது. இப்படிப்பட்ட பக்தி வைராக்கியம் நம்மையும் மானிட ஜீவிகளாக நமக்குண்டான எல்லாவற்றையும், நாம் எதிர்பார்க்கிறவைகளையும் பட்சிக்கிற தன்னலத் தியாகமாயிருக்கிறது. **- P ’34, 160.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோசு 24:15,16; 1நாளா 29:17; 2நாளா 15:15; எஸ்றா 7:23; சங் 119:139; பிர 9:10; ஏசா 62:6,7; மத் 5:13-16; யோவா 9:4; ரோம 12:11; 1கொரி 13:3; 15:58; 2கொரி 4:8-10,13,16-18; கலா 4:18; 6:9; தீத் 2:14; 2பேது 3:14; யூதா 3; வெளி 3:19.**

**கோபுர வாசிப்பு : - Z ’13, 168 (R 5250).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் கர்த்தருக்காக பக்திவைராக்கியமுள்ளவனாக இருந்தேனா? எதில்? எவ்வாறு? ஏன்? அதில் உதவியாயிருந்தது எது? இடையூறாக இருந்தது எது? அதன் பலன் என்ன?**